வெளியுறவுச் செயலாளர் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸ் நகருக்கு பயணம் (09-10 நவம்பர் 2026)

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, 2026-ஆம் ஆண்டு நவம்பர் 09 முதல் 10 வரை பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகருக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டார்.

2. இந்த வருகையின் போது, இந்திய வெளியுறவுச் செயலாளர், பிரான்சின் ஐரோப்பா மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் பொதுச் செயலாளர் திரு. மார்ட்டின் பிரையன்ஸ் அவர்களுடன் இணைந்து, 3-வது இந்தியா-பிரான்ஸ் மூலோபாய விண்வெளி உரையாடலுக்கு இணைத் தலைமை வகித்தார். இரண்டாவது இந்தியா-பிரான்ஸ் மூலோபாய விண்வெளி உரையாடலுக்குப் பிறகு ஏற்பட்ட முன்னேற்றங்களை இரு தரப்பினரும் ஆய்வு செய்ததுடன், விண்வெளித் துறையில் நடைபெற்று வரும் வலுவான இருதரப்பு ஈடுபாடு மற்றும் G2G மற்றும் வர்த்தகப் பிரிவுகளில் மேலும் ஒத்துழைப்பதற்கான வழிகள் குறித்தும் விவாதித்தனர்.

3. இந்தியா-பிரான்ஸ் பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் முக்கியமான தொழில்நுட்பங்கள் குறித்த கலந்துரையாடலின் தொடக்கக் கூட்டத்திற்கு, வெளியுறவுச் செயலாளர் மற்றும் பொதுச் செயலாளர் மார்ட்டின் பிரையன்ஸ் இணைத் தலைவராக இருந்து தலைமை தாங்கினார். இந்த உரையாடல் பொறிமுறையானது, 2026 ஜூன் மாதத்தில் பிரதமர் பிரான்ஸ் நகருக்கு மேற்கொண்ட பயணத்தின் போது நிறுவப்பட்டது. இந்த கலந்துரையாடல்களில், விநியோகச் சங்கிலி பாதிப்புகள், முக்கிய தொழில்நுட்பங்கள், இணையப் பாதுகாப்பு மற்றும் மூலோபாய விநியோகங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. இந்த உரையாடலானது புத்தாக்க செயல்திட்டம் 2030, இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டு, ஏற்கனவே உள்ள பொருளாதார மற்றும் நிதி உரையாடல் மற்றும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்கும் நோக்கம் ஆகியவற்றை நிறைவு செய்வதாக இரு தரப்பினரும் குறிப்பிட்டனர். உரையாடலின் போது கண்டறியப்பட்ட முன்னுரிமைகள் குறித்துச் செயல்பட அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

4. வெளியுறவுச் செயலாளர் தனது பயணத்தின் ஒரு பகுதியாக, பொதுச்செயலாளர் பிரையன்ஸ் அவர்களுடன் இணைந்து, இந்தியா-பிரான்ஸ் சிறப்பு உலகளாவிய மூலோபாய கூட்டாண்மை மற்றும் ஹொரைசன் 2047 செயல்திட்டத்தின் செயலாக்கம் குறித்து ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டார். அவர்களது கலந்துரையாடல்கள் இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கிய அம்சங்களையும், இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய உறவுகளையும் உள்ளடக்கியிருந்தன. இரு தரப்பினரும் பரஸ்பர நலன் மற்றும் ஒத்துழைப்பு சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து பலதரப்பு மன்றங்களில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

5. இந்த வருகையானது இந்தியா மற்றும் பிரான்ஸ் இடையிலான தொடர்ச்சியான உயர்மட்ட பரிமாற்றங்களையும், தங்களின் சிறப்பு உலகளாவிய மூலோபாயக் கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்துவதற்கான இரு தரப்பினரின் கூட்டு அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

பாரிஸ்

நவம்பர் 10, 2026